2. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறிட்ட வினாக்கள்

மாநில மின் உற்பத்திக் கழகம் அமைப்புத் திட்டம்.

467—(*வினா எண் 21139) திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாநிலத்தின் மின் உற்பத்தியைக் கவனிக்கவென்று ', மாநில மின் உற்பத்திக் கழகம் '' (Power Generation Corporation) அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப காலத்தில் 2, 3 ஆண்டுகளாக மின் உற்பத்திக்கு என்று ஏராளமான அளவில் மாநில அரசு தொகையை ஒதுக்கி செலவு செய்துகொண்டிருக்கிறது. மின் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்காக கர்நாடக மாநில அரசு கூட இப்படிப்பட்ட அமைப்பை ஏற்படுத்தி அது திறன்பட செயல்பட்டு வருகிறது. அதாவது மின் உற்பத்திக்காக மட்டும் தனிக் கழகமே ஆரம்பித்திருக்கிறார்கள். இப்படி ஏராளமான அளவில் மின் உற்பத்திக்காக மின் வாரியம் செலவு செய்து வருவதால், மின் உற்பத்தியை திறம்பட செய்வதற்காக, மின் உற்பத்திக்காக மட்டுமே, நம்முடைய மாநிலத்திலும் தனியாக கழகம் ஆரம்பிக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இந்தக் கருத்து அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் வாரியம் மின் உற்பத்தியைச் செய்வது போல, மாநிலத்தில் உள்ள தனிப்பட்டவர்கள் மின் உற்பத்தியை செய்வதற்கு முன்வந்தால், அவர்களை அனுமதிப்பதற்கான அனுமதியை மாநில அரசு மைய அரசிடம் கோரியிருக்கிறதா ? அப்படி என்றால் அதனுடைய விவரங்கள் தெரிவிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெளிநாட்டிலிருந்து இப்பொழுதுதான் திரும்பி வந்திருக்கிறார்கள். ஏற்கெனவே, இத்தகைய கேள்விக்கான பதில் இங்கேயே அளிக்கப்பட்டிருக்கிறது